18 ஜூலை 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 16 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்



மாதாந்திர கருப்பொருள்:

**உங்கள் வாயைத் திறந்து ஒடுக்கப்பட்டவர்களைக் காத்தல்**

## நான் ஆயர்களை நியமிப்பேன்!

மக்களுக்கு நற்செய்தியை அறிவித்துவிட்டு, அப்போஸ்தலர்கள் மீண்டும் இயேசுவிடம் திரும்பி வருகிறார்கள். நற்செய்தியை அறிவித்துவிட்டு வந்தபின் நிச்சயம் உற்சாகத்துடன் இருந்திருப்பார்கள். இருந்தாலும் அவர்கள் களைப்படைந்துவிட்டார்கள். இயேசுவைப் பொறுத்தமட்டில், அப்போஸ்தலர்களின் உடல்நலம் முக்கியமானது. இயேசு அப்போஸ்தலர்களிடம் தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று ஓய்வெடுக்கலாம் என்று கூறுகிறார். அவர்கள் எங்குச் செல்கிறார்கள் என்பதை அறிந்துகொண்ட மக்கள், அப்போஸ்தலர்களும் இயேசுவும் சென்று சேர்வதற்கு முன்பதாகவே அவர்கள் செல்கிறார்கள். "ஆயன் இல்லாத ஆடுகளைப் போல் இருந்த அம்மக்களைப் பார்த்த இயேசு, அவர்கள் மீது பரிவு கொண்டார்.

'இருள் நிறைந்த பள்ளத்தாக்கான' இவ்வுலகில் 'சரியான பாதைக்கு' மனித குலத்தை வழிநடத்திச் செல்ல நல்ல ஆயர்கள் இந்த **உலகிற்கு மிக அவசியமாகவும், அவசரத்தேவையாகவும் உள்ளது**. ஏனென்றால், கடவுளின் மக்களைச் சிதறடிக்கும் பல 'தவறான ஆயர்கள்' உள்ளனர். இவர்கள் அரசாங்கத்திலும், அதிகாரம், சமூகத்தில் ஏன் திரு அவையிலும் உள்ளவர்களாக இருக்கலாம். மக்களை சரியான பாதையில் அவர்கள் வழிநடத்தவும், வழிகாட்டவும், தவறிவிட்டால், கடவுளே அவர்தம் மக்களை மேய்ப்பார்.

தந்தையாகிய இறைவன், நம்மை வழிநடத்தவும், வழிகாட்டவும். முறிந்ததைக் குணப்படுத்தி, முழுமைக்கு உருமாற்றவும் கூடிய நல்ல ஆயராகிய கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார். பரபரப்பான கூட்ட நெரிசலிலிருந்து விலகி, அவருடன் நேரத்தைச் செலவிடவும். ஓய்வெடுக்கவும் ஒவ்வொரு நாளும் இயேசு நம்மை அழைக்கின்றார். அவருடைய அன்பாலும் இரக்கத்தாலும் நாம் வலிமை பெறவும், நம்மை பசும்புல் மேய்ச்சல் உள்ள இடங்களுக்கும் அமைதியான நீர்நிலைகளுக்கும் நம்மை நடத்திசெல்லவும் விரும்புகிறார்.

கடவுள் நம்மையும் அவருடைய "ஆயர்களாக" சந்தேகம், அவநம்பிக்கை பயம், மற்றும் மோதல், வலி, துயரம், ஏழ்மை மற்றும் அநீதி ஆகியவை நிறைந்திருக்கும் சூழ்நிலைகளுக்கு அனுப்ப விரும்புகிறார். அவர் தரும் ஆறுதலையும், அமைதியையும் அனைவருக்கும் குறிப்பாக, ஏழைகள், நலிவுற்றவர்களோடுப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறார்.

இயேசுவோடு தனிமையில், அவரோடு அமைதியில் இருக்கிறோமா? இது நமக்கு மிகவும் முக்கியம் ஏனென்றால், கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வசதி ஆறுதலையும், ஒப்புரவு மற்றும் வலிமையையும் நாம் பெற்றுக்கொள்ள இது உதவும். அப்போதுதான் உண்மையிலேயே நாம் பிறருக்காகச் சென்று கிறிஸ்துவின் தகுதியுள்ள ஆயர்களாக அன்பைத் தரவும், தரமான சேவை செய்யவும் இயலும். எரேமியா இறைவாக்கினர் கூறியுள்ளதுபோல " அவற்றைப் பேணிக்காக்க நான் மேய்ப்பர்களை நியமிப்பேன். இனி அவை அச்சமுறா; திகிலுறா; காணாமலும் போகா, என்கிறார் ஆண்டவர்"(எரே: 23:4)

அவருடைய குரலைக் கேட்டு அவருக்கு மறுமொழி கொடுப்போமா?

மனனம் செய்ய இந்த வார வசனம்:

**"ஆண்டவரே, என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை"**

((திருப்பாடல்: 23:1)

**இன்றைய வாசகங்கள்:**

எரேமியா: 23: 1-6
திருப்பாடல்: 23: 1-6
எபேசியர்: 2: 13-18
மாற்கு 6: 30-34



*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

**CHURCH OF OUR LADY OF FATIMA**
Jalan Sultan Abdul Samad
50470 Kuala Lumpur, Malaysia
Tel: +603.2274 1631 / 2389 7244
Email: fatimachurch@archkl.org
FB: facebook.com/fatima.church
Web: www.fatimachurchkl.com

**Parish Administrator: Rev. Fr. Dr. Clarence Devadass**
**Asst Priest: Rev. Fr. Bernard Hyacinth, SJ**
**Office Administrator: Ms. Juliet Sylus**

*To contact the Parish Office outside office hours, kindly WhatsApp: 016.650 5039 (emergencies only).*

**Parish Office Hours:**
*The Parish Office closed during the MCO.* If you need to contact us, kindly call or text: 016.650 5039 or you may email: fatimachurch@archkl.org

## உணவுதவி




எங்கள் வேண்டுகோளுக்கிணங்க உணவுதவிக்கு பெரும் ஆதரவு நல்கிய உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி. இது பாதிக்கப்பட்டோர்க்கும் தேவைப்படுவோர்க்கும் பெரிதும் உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாங்கள் இவ்வுணவுப் பொருள்களை இன்னும் 2-3 வாரங்களுக்கு பிரிக்பீல்ஸ் சுற்று வட்டாரத்திலுள்ள மக்களுக்கு வழங்கவிருக்கிறோம். தேவையில் இருப்போரை யாரும் உங்களுக்கு தெரிந்திருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

## தேவையில் இருப்போர்க்கு அதிச (BEC) வழி உதவிகள்



நாம் அனைவரும் தற்போது 3.0 நடமாட்ட கட்டுப்பாட்டு உத்தரவு காலக்கட்டத்தில் இருப்பதால், மீண்டும் பலரின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஏழைகள், தினசரி வருமானம் பெறுபவர்கள், தனியாக வசிக்கும் முதியவர்கள் போன்றோர் அதிகம் பாதிக்கப்படுபவர்களில் அடங்குவர். தயவுசெய்து உங்கள் அதிச (BEC) உறுப்பினர்களை அவர்கள் வசிக்குமிடத்தில் தேடுமாறு கேளுங்கள். இக்காலகட்டத்தில் உணவு தேவைப்படும் குடும்பங்கள் அல்லது தனிநபர்கள் இருந்தால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். பங்கின் புனித வின்சன்ட் தி பவுலுடன் இணைந்து, நாங்கள் சில உதவிகளை வழங்க முடியும். இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் ஒருவருக்கொருவர் உதவுவோம்.

## சகாய மாதாவுக்கு நவநாள்




இந்த நடமாட்ட கட்டுபாட்டுக் காலத்தில், சகாய மாதாவுக்கு நவநாள் செபங்கள் இயங்கலை வழி ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4.00 மணிக்கு நடபெறும். எங்களோடு செபத்தில் இணைய உங்களை அன்போடு அழைக்கின்றோம். இதில் கலந்து கொள்ள நீங்கள் வலையொளி அலைவரிசைக்கு YouTube channel: https://bit.ly/olfkl அல்லது முகநூலுக்கு Facebook Page: facebook.com/fatima.church செல்லவும்.

## பங்கு அலுவலக அடைப்பு




நடப்பில் இருக்கும் பொது முடக்கத்தின் காரணமாக, பங்கு அலுவலகம் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும். இருப்பினும் பங்கு அலுவலகப் பணியாளர்கள் வீட்டில் இருந்தபடியே தங்கள் பணியைச் செய்கிறார்கள். தேவைகள் இருப்பின் பங்கு அலுவலகத்தை கைபேசி 016-650 5039 எண்ணுடன் தொடர்பு கொண்டோ அல்லது குறுஞ்செய்தியோ அனுப்பலாம். அல்லது மின்னஞ்சல் வழி தொடர்பு கொள்ளலாம். fatimachurch@archkl.org

## முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு (RCIA)

RCIA
A Journey In Faith

கத்தோலிக்க நம்பிக்கையைப் பற்றி ஆழமாக ஆய்ந்து அறிந்திட உங்களுக்கு அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு ஆர்வமா? உங்கள் கத்தோலிக்க வாழ்க்கைத் துணையோடு ஆலயத்தில் அமர்ந்து, கத்தோலிக்கராக மாற என்ன செய்ய வேண்டும் என பல ஆண்டுகளாக யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? கடவுளைத் தேடும் ஒருவரைத் தெரிந்துகொண்டு, அந்த நபரை முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு வகுப்பிற்கு அழைக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் இது ஒரு தனிப்பட்ட அழைப்பாகவும் சவாலாகவும் கருதுங்கள். இந்த செயலின் மூலம் பெரியவர்கள் உரோமைய கத்தோலிக்க திருஅவையில் உறுப்பினர்களாகிறார்கள். நமது பங்கில் எதிர்வரும் ஆகஸ்ட் 2021 முதல் முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு வகுப்பைத் தொடங்கவுள்ளோம். கூடுதல் தகவலுக்கு அல்லது பதிவு செய்ய பங்கு மின்னஞ்சலுக்குச் செல்லவும். fatimachurch@archkl.org

## பார்வையற்றோர் சமூகத்திற்கு உணவுதவி

மலேசிய பார்வையற்றோர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் நமது பங்கு தொடர்ந்து ஒவ்வொரு திங்கள்கிழமைகளில் (கேட்டுக்கொண்டதிற்கிணங்க) ஒரு உணவுப் பொட்டலம் 4.00 ரிங்கிட் எனும் விதத்தில் 30 உணவுப் பொட்டலங்களை பிரிக்பீல்ஸ் பார்வையற்றோர் சமூகத்திற்கும் மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள பார்வையற்றோர்க்கும் வழங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஞாயிறு காணிக்கைகளும் நன்கொடைகளும்

பொது திருப்பலிகள் இரத்து செய்யப்பட்டிருக்கும் இக்காலக்கட்டத்தில், உங்கள் காணிக்கைகள் அல்லது நன்கொடைகளை ‘டச் என் கோ’ செயலி (Touch n Go App) வழி அனுப்பும் வசதி இப்பொழுது உள்ளது. தகவல் குறியீட்டை அலகீடு செய்து, (QR scan) உங்கள் தொகையை அதில் சேர்த்து அனுப்பவும். (சேவைக்கான பிடித்தம் ஏதும் இல்லாமல் இருக்க வேண்டும்) அடுத்த நாள் அத்தொகை ஆலய கணக்கு வரவில் சேர்த்துக் கொள்ளப்படும்.

CHURCH OF OUR LADY OF FATIMA
Have your customers scan this QR code to receive payments.

## திருப்பலிக்கு பெயர் ஒப்புக்கொடுத்தல்

இக்காலக்கட்டத்தில் ஆலயமும் ஆலய அலுவலகமும் மூடப்பட்டிருப்பதால், நீங்கள் திருப்பலிக்கு பெயர்களை ஒப்புகொடுத்தலையும், அல்லது நமது பங்கிற்கு பொருளுதவிகளையும் கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு தொடர்ந்து செய்யலாம்.

வங்கி விவரம்
வங்கி/ Bank : CIMB
கணக்கின் பெயர்/ Account Name : Church of Our Lady of Fatima
கணக்கின் எண்/ Account Number : 8000833691

தொகையும் விளக்கமும்
பங்கு அலுவலகம் சரியான முறையில் கணக்கு அறிக்கை வைத்துக் கொள்ள உங்களின் இயங்கலைப் பணப் பறிமாற்றத்தில் (Online Transfer) கீழ்க்கண்ட தகவல்களைக் குறிப்பிடவும்.
1. தொகை
2. நோக்கம் (பின்வருவனவற்றுள் ஏதாகிலும் ஒன்று) திருப்பலி கருத்துகள் (உங்கள் பெயர்களையும் திருப்பலிக்கு ஒப்புக்கொடுக்கும் பெயர்களையும் உள்ளிடவும், எ.கா. நன்றியறிதல்/ சிறப்புக் கருத்து/ ஆன்ம இளைப்பாற்றி)

உறுதியாக்கம் (வைப்பு சீட்டு/ Bank-in-Slip)
பணப்பறிமாற்றத்தை உறுதி செய்து எங்களுக்கு அனுப்பி வைப்பது மிக முக்கியமானது. மின்னஞ்சல்/ Email : fatimachurch@archkl.org அல்லது புலனம்/ Whatsapp: 016-6505039

## திருப்பலிக்கு முன்பதிவு

நடமாட்ட காட்டுபாட்டு உத்தரவு தளர்த்தப்பட்ட பின் திருப்பலிக்கு முன்பதிவு செய்பவர்கள் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றவும்.
1. அதிச ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளுதல்.
2. ஆலய அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுதல் (03 22741631).
3. இயங்கலைப் பதிவு https://fatimachurchkl.com/management-system

திருப்பலியில் கலந்து கொள்வதற்கான குறுஞ்செய்தியை பெறும் வரை காத்திருக்கவும். குறுஞ்செய்தி கிடைக்கப்பெறா விட்டால், திருப்பலியில் கலந்து கொள்வதை தவிர்க்கவும்.

